**காணாமற்போன ஆட்கள் மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றிய முறைப்பாடுகள் மற்றும் தகவல்களினடிப்படையிலான பட்டியல்**

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவகலத்திற்குக்(காஆஅ) கிடைத்த முறைப்பாடுகள் மற்றும் தகவல்களினடிப்படையிலான பட்டியல் கொழும்பிலுள்ள காஆஅ தலைமையகம் மற்றும் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் மாத்தறையிலுள்ள அதன் பிராந்திய அலுவலகங்களில் பார்வையிடக்கூடியதாக இருக்கும்.

**பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் காஆஅ ற்கு எவ்வாறு கிடைக்கப்பெற்றது?**

பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் கீழ்வரும் முறைகளில் பெறப்பட்டன

i)காஆஅ இற்கு நேரடியாகக் கிடைத்த முறைப்பாடுகள்

ii) மாவட்ட செயலகங்கள் மூலமாக பெற்று முன்னாள் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு கஆஅ விற்கு அனுப்பிவைத்த முறைப்பாடுகள்

iii) காஆஅ இன் வேண்டுகோளின் பேரில் ஆயுத படையினரால் வழங்கப்பட்ட யுத்தச்செயலால் காணாமல் போன படையினரின் பட்டியல்

யுத்தச்செயலால் காணாமல் போன பொலிஸ் உத்தியோகத்தர்களின் தகவல்கள் காஆஅ ற்கு இன்னும் கிடைக்கப்பெறவில்லை.

**இப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருப்போர் யாவர்?**

பட்டியலின் பகுதி 1 ஆனது, கொழும்பு, மொனராகலை, புத்தளம், கேகாலை, மன்னார் மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் வசிப்போரால் தரப்பட்ட தகவல்களை உள்ளடக்குகிறது.

2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் 27 ஆம் பிரிவின் பிரகாரம், மோதல்கள், அரசியல் அமைதிக்குலைவு மற்றும் குடியியல் குழப்பங்கள் காரணமாக காணாமற்போன ஆட்கள், யுத்தச்சூழலில் காணாமல் போன ஆயுத படையினர் / பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் வலுக்கட்டாயமாகக் காணாமலாக்கப்பட்டவர்கள் காஆஅ அலுவலக பணிப்பாணையின் கீழ் வருகின்றனர்.

காஆஅ ன் பணிப்பாணையானது குறிப்பிட்டதொரு காலப்பகுதி, சமூகம் அல்லது பிராந்தியத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டதல்ல.

இப்பட்டியலானது காஆஅ ன் பணிப்பாணைக்குள் உள்ளடங்கும் தகவல்களையும் காஆஅ ன் பணிப்பாணைக்குள் உள்ளடங்குமா என்பதை தீர்மானிப்பதற்கு மேலதிக தெளிவுபடுத்தல்களை வேண்டியிருக்கும் தகவல்களையும் உள்ளடக்குகிறது. தெளிவாக காஆஅ ன் பணிப்பாணைக்குள் உள்ளடங்காத சுனாமியால் காணாமல் போனோர் போன்ற விடயங்கள் நீக்கப்பட்டுள்ளன.

காஆஅ ஆனது காஆஅ இனது பணிப்பாணையின் கீழ் வராத விடயங்கள் தொடர்பிலான முறைப்பாடுகள் சம்பந்தமாக உரிய குடும்பங்களுக்கு அறிவித்து வருகின்றது. தகவல்கள் தெளிவற்றதாக அல்லது பற்றாக்குறையாகவுள்ள விடயங்கள் தொடர்பாக, காஆஅ ஆனது மேலதிகத் தகவல்களைக் கோரி வருகின்றது.

**பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவை?**

இப்பட்டியலில் கீழ்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

i) காணாமற்போனவர் அல்லது காணாமலாக்கப்பட்டவரிற்கு ஒதுக்கப்பட்ட உசாத்துணை இலக்கம்:
ii) காணாமற்போனவர் அல்லது காணாமலாக்கப்பட்டவரினது பெயர் ஆங்கிலத்தில் மற்றும் சிங்களம் அல்லது தமிழில்
iii) காணாமற்போன அல்லது காணாமலாக்கப்பட்ட திகதி
iv) முறைப்பாட்டாளரின் மாவட்டம்.

காஆஅ ற்கு வழங்கப்பட்ட தகவல் சிங்களத்திலோ தமிழிலோ வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் குறித்த முறைப்பாட்டில் பதிவு செய்யப்பட்டவாறே பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இத்தகைய பெயர்கள் ஆங்கிலத்திற்கு மாற்றப்பட்ட போது ஒருசீரானதாகவும் பட்டியலில் தேடலை மேற்கொள்ளத்தக்கவண்ணமும் தராதரத்தப்படுத்தப்பட்டுள்ளன.

தகவல்கள் ஆங்கிலத்தில் பெறப்பட்ட சந்தர்ப்பங்களில் முறைப்பாட்டில் பதியப்பட்டவாறே குறிப்பிட்ட பெயர்கள் பதியப்பட்டுள்ளன.

**பட்டியலை தயாரிக்கும் முறை எவ்வாறமைந்திருந்தது?**

தொடர்புடைய சட்டத்தின் பிரிவு 10 (1) (உ) இன் கீழ், காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்கள் தொடர்பான தரவுகளை ஒன்றிணைத்து மையப்படுத்த காஆஅ ஆணைப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பட்டியலைப் பிரசுரிப்பதானது காணாமற்போனவர்கள் அல்லது காணாமலாக்கப்பட்டவர்களினது தகவல்களைச் ஒன்றிணைக்கும் செய்முறையின் ஒரு பாகமாகும்.

காஆஅ ஆனது 2020 பெப்ரவரி மாதம் அதன் தற்காலிக பட்டியலைச் சரிபார்க்கும் செய்முறையை ஆரம்பித்தது. இதன் பாகமாக காணாமல் போனோரின் குடும்பத்தினர் தம் அன்பிற்குரியவர்கள் பற்றிய தகவல்களைச் சரிபார்க்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டனர். அதேநேரம், காஆஅ ஆனது நகல் பதிவுகளைத் தவிர்ப்பதற்காகத் தமது உள்ளகச் செய்முறைச் சரிபார்ப்பிலும் ஈடுபட்டு வருகிறது.

**பட்டியலை ஆய்வு செய்த பின் குடும்பத்தினர் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் என்ன?**

தற்போது பிரசுரிக்கப்படும் பட்டியலில் பதிவுசெய்யப்பட்ட தகவல்களை மீளாய்வு செய்து, ஏதேனும் கரிசனைகள் இருப்பின் காஆஅ விற்குத் தெரிவிப்பதற்கு குடும்பங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன.

**காணாமற்போனவர்கள் அல்லது காணாமலாக்கப்பட்டவர்களினது தகவல்கள் பட்டியலில் உள்ளடங்காதிருப்பின் என்ன செய்யலாம்?**

தங்களது கரிசனைகள் தொடர்பில் காஆஅ ன் உத்தியோகத்தர் ஒருவருக்கு அறிவித்து பட்டியலை மீளாய்வு செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கவும்.

தங்களது அன்புக்குரியவர் ஒருவர் காணாமல் போயிருந்த போதும் அத்தகவல்கள் இப்பட்டியலில் உள்ளடக்கப்படாதிருப்பின், தாங்கள் குறிப்பிட்ட மாவட்டத்தில் வசிக்கும் காணாமல் போன ஒருவரின் குடும்ப அங்கத்தவரொருவராயின் தயவு செய்து காஆஅ ற்கு முறைப்பாடொன்றை செய்யவும்.

குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு வெளியே வசிக்கும் குடும்ப அங்கத்தவர் ஒருவராயின் இப்பட்டியல் தொடர்ந்தும் புதுப்பிக்கப்படும் என்பதை கருத்திற் கொள்க.

**பட்டியலை பார்வையிடும் பொதுமக்கள் எடுக்கக்கூடிய நடவடிக்கை என்ன?**

பட்டியலில் சேர்க்கப்பட்ட காணாமல் போன அல்லது காணாமலாக்கப்பட்ட நபருக்கு ஏற்பட்ட சம்பவங்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு ஏதேனும் தகவல்கள் தெரிந்திருப்பின் அது பற்றி காஆஅ விற்கு அறிவிப்பதற்கும் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

**காஆஅ பட்டியலை எவ்வாறு பயன்படுத்தும்?**

காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்கள் தொடர்பான பல விசாரணை ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்ட போதிலும், காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்கள் தொடர்பான ஒருங்கிணைந்த உத்தியோகபூர்வ பதிவு இன்றுவரை இலங்கையில் இல்லை. இப்பட்டியலானது இலங்கையில் காணாமல் போன மற்றும் காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்களின் உத்தியோகபூர்வ பதிவை நிறுவும் செயன்முறையில் ஒரு முக்கியமான படியாகும்.

அதன் பணிப்பாணைக்கு உட்பட்ட காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்களின் ஒருங்கிணைந்த பட்டியலை உருவாக்குதலானது, விசாரணைகள் மற்றும் புலனாய்வுகளை நடத்துவதற்கும், உள்ளகச் செயல்முறைகளை அபிவிருத்தி செய்வதற்கும், காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட மற்றும் அவர்களது உறவினர்களின் உரிமைகள் மற்றும் நலன்கள் குறித்து பரிந்துரைகளை வழங்க காஆஅ விற்கு உதவுகிறது.